## தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை – 2017

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, ஒன்றிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் தர மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 56(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01

(i) உரிமை மாற்றல் கூற்றில் வருடக் கணக்காக அசைவற்று காணப்படும் ரூபா 784,037,781 கூட்டுத்தொகையான 05 கணக்கு மீதிகள் காணப்பட்டதுடன் நியமத்தின் 95(இ) பந்தியின் பிரகாரம் அக்கணக்குகளின் தன்மை மற்றும் நோக்கங்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 119 ஆம் பந்திக்கு இணங்க அரசின் மானியங்கள் மற்றும் ஏனைய மானியங்கள் என, மானியங்கள் வகைப்படுத்தப்பட்டு உரிமை மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 78,800,000 ஆன மூலதன மானியம் திரண்ட நிதியத்திற்கு செலவு வக்கப்பட்டிருந்தது. மேலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள உரித்து பெறுமதிக்கும் உள்ளடக்கத்திற்கும் இணங்கும் வகையில் உரிமை மாற்றங்கள் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஏனைய வருமானம் ரூபா 60,476,914 மற்றும் ரூபா 48,310,950 ஆன அட்டுறு செலவினம் ஒவ்வொரு வருமானம் அல்லது செலவினம் விடயம் நிரூபணமாகும் வகையில் கணக்கீடு செய்யப்படாமல் உரிய வருமானம் அல்லது செலவினம் மேற்கொள்ளப்பட்ட துறைகளின் பிரகாரம் பகுப்பாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

(i) காசுப் பாய்ச்சல் கூற்றில் நடைமுறை வேலைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 18,840,339 எனக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 11,710,672 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) அதிகாரசபையினால் உழைக்கப்பட்ட வருமானத்தில் பகுதிநேர பாடநெறிகளுக்காக ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,486,375 பெறுமதியான நிலையான சொத்துக்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 65 ஆம் பந்திக்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பீடு செய்யாத காரணத்தினால் ரூபா 91,309,747 கிரயமான 40 மோட்டார் வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் மேலும் பயன்படுத்தபடக்கூடியதாக இருந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 3,259,307,574 காணிகள், கட்டிடங்கள் அலுவலக உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் உட்பட நிலையான சொத்துக்கள் 47 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ''டெலி'' என்ற கணக்கீட்டு பொதி 2011 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வந்த போதிலும், கொடுக்கல் வாங்கல்கள் சரியாக பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்யப்படாததன் காரணமாக பொதி மூலம் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டு வரையிலும் அதிகாரசபை தவறியிருந்தது. எவ்வாறாயினும் பொதி மூலம் பெற்றுக்கொண்ட பரீட்சை நிலுவையை அடிப்படையாகக் கொண்ட நிதிக்கூற்றுக்கள் கையால் (Manual) தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பரீட்சை நிலுவையில் உள்ளடக்கப்பட்ட கணக்கு மீதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரீட்சை நிலுவையில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 158,925,745 ஆன வரவு மீதிகள் மற்றும் ரூபா 1,417,252 ஆன தொங்கல் கணக்கொன்றும் உள்ளடக்கப்பட்ட ரூபா 249,578,131 ஆன செலவு மீதிகள் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) பரீட்சை நிலுவையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 518,136 மற்றும் ரூபா 3,072,105 தொகையான 02 தொங்கல் கணக்கு மீதிகள் முறையே திரண்ட நிதியத்திலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் சீராக்கப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 143,056,895 ஆன பற்றாக்குறை மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறித்த பற்றாக்குறையும் உள்ளடக்கிய திரண்ட நிதிய மீதியான ரூபா 869,815,126 தொகையும் பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தமை காரணமாக அப்பரீட்சை நிலுவை கணக்காய்விற்காக ஏற்றுக்கொள்ள முடியாத முறையான பரீட்சை மீதியொன்றாக கருத முடியாமல் இருந்தது.

மேற்குறித்த குறைகள் காரணமாக அதிகாரசபையினால் பேணப்பட்டு வந்த கணக்கீடு தொடர்பாக நம்பிக்கை வைக்க முடியாமையால் நிதிக்கூற்றுக்களில் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளின் சரியானதன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளுக்குரிய ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,116,971 ஆன முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கம் செய்வதற்குப் பதிலாக ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமை காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் கணக்கிடலின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை ஊழியர் வாழ்க்கை செலவினப் படிகள் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன அண்ணளவாக ரூபா 172,549,951 ஆக இருந்த போதிலும் அதற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடோ அல்லது பதிவுகள் மூலமோ வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்யப்படாத உத்தியோகத்தரொருவருக்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 503,125 தொகையான பணிக்கொடை மற்றும் மிகை கொடுப்பனவு, பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கிலிருந்து அகற்றுதல் மற்றும் மீளாய்வாண்டின் போது முறையாக சேவையிலிருந்து விலகியிருந்த அதிகாரசபையின் 15 உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரசபையில் 05 ஆண்டு சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத ஊழியர்கள் இராஜினாமா செய்த, மரணித்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற, 06 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,325,755 ஆன பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்த காரணத்தினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கு ரூபா 6,822,630 இனால் மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 6,022,082 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்தமை காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் திரண்ட நிதிய மீதி அப்பெறுமதியால் முறையே மிகை மற்றும் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தன.

(ஊ) 2017 ஆம் ஆண்டில் கட்டிடங்களில் அறைகளை வேறாக்குதல் (Partition)இற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 814,448 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி மற்றும் ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமதியால் முறையே குறைவாகவும் மிகையாகவும் கணக்கிடப்பட்டிருந்தன.

(எ) பதுளை மாவட்ட பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்குரிய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 379,920 ஆன பெறுமதி சேர் வரி அட்டுறு செலவினமாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வேலை ஆரம்பிப்பு முற்பணமாக கொடுப்பனவு செய்த ரூபா 16,960,867 ஆன நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்தமைக்குப் பதிலாக முடிவுறாத வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) தங்காலை மாவட்ட பயிற்சி நிலையத்திற்கு செயற்திட்டத்தின் மூலம் நேரடியாக வழங்கப்பட்டிருந்த 23 மடிக் கணனிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டிற்காக நிபுணத்துவ துறைசார் அபிவிருத்தி செயற்திட்டத்திலான (SSDP) வழங்கப்பட்டிருந்த நிதியங்களிலிருந்து மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 21,421,137 ஆண்டின் மூலதன பெறுவனவாக கணக்கீட்டு செய்வதற்குப் பதிலாக வருமான பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச அலுவலகங்களால் பேணப்பட்டிருந்த 04 வங்கிக் கணக்கிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசு மீதி ரூபா 3,214,484 ஆக இருந்த போதிலும், காசேட்டின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,656,555 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 557,929 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) அம்பாறை மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குரிய 02 வங்கிக் கணக்குகளுக்குரிய காசேட்டின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 280,660 ஆன வரவு மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 51,277 மேலதிகமொன்றாக காணப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டிகுரிய கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 59,030,134 பெறுமதியான 11 நாட்குறிப்பு பதிவுக்குரிய விபரமான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் அந்நாட்குறிப்புக்களுக்கான தேவைப்பாடு, சரியானதன்மை மற்றும் பொருத்துதல் தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 54,344,471 தொகையான கடன்பட்டோர் மீதிகளில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,401,630 தொகையான 24 கடன்பட்டோர் மீதிகளும் 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 306,481 தொகையான 03 கடன்பட்டோர் மீதிகளும் 01 முதல் 03 வருடங்களுக்கிடைப்பட்ட ரூபா 31,300,333 தொகையான 07 கடன்பட்டோர் மீதிகளும் காணப்பட்டதுடன், அந்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1995 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் பல்வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 6,361,996 கூட்டுப் பெறுமதியான 53 முற்பண மீதிகளை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 80,863,242 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 310,419 தொகையான 9 கடன்கொடுத்தோர் மீதிகளும், 03 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 2,018,953 தொகையான 04 மீதிகளும், 1 வருடத்திற்கு 2 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 1,330,865 தொகையான 12 மீதிகளும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நானாவித கடன்பட்டோர் மீதியினுள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத உள்ளக கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலான மீதி ரூபா 13,436,498 ஆக இருந்ததுடன், கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளக கொடுக்கல்

வாங்கல்களின் அடிப்படையிலான மீதி ரூபா 8,154,296 ஆக இருந்தது. இந்த உள்ளக கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலான கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளிடையே 5 வருடங்களை விஞ்சிய தீர்க்கப்படாத ரூபா 896,620 தொகையான 17 மீதிகள் காணப்பட்டன. வருடாந்தம் ஒவ்வொரு அலுவலகத்தினால் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு அது தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வராமை இந்த வேறுபாட்டிற்கு காரணங்களாக இருந்தன.

எவ்வாறாயினும் 2018 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அந்த கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 37,417,492 வரையும் செலுத்த வேண்டிய மீதி ரூபா 16,149,511 வரையும் உள்ளக கொடுக்கல் வாங்கல்கள் அடிப்படையிலான கடன் மீதி ரூபா 1,441,000 வரை குறைவடைந்துள்ளதாக தலைவரால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,317,660 தொகையான முதலீட்டிற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | வடக்கு கிழக்கு மாகாணங்களில் விசேட செயற்திட்டங்கள் மற்றும் பயிற்சி தொடர்பாக கடமைகளுக்காக ஈடுபடும் உத்தியோகத்தர் களுக்கு நாளொன்றுக்கு ரூபா 3,000 வீதமும் பயிற்சி மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு நாளொன்றிற்கு ரூபா 4,000 வீதம் உணவு மற்றும் தங்குமிட கட்டணங்களும் திறைசேரியின் அங்கீகாரமின்றி நிர்வாக சபை அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப் பிரமாணம் 104 | மீளாய்வாண்டில் நேர்ந்த 02 வாகன விபத்துக்களுக்கு மற்றும் முன்னைய வருடங்களில் ஏற்பட்ட வாகன விபத்துக்களுக்குரியதாக இடம்பெற்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 272 ஆம் பந்தியின் (3) பிரிவு | செலவிடப்படுகின்ற மாதம் முடிவடைந்து ஆறு மாத காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் 2018 யூலை மாதம் வரையிலும் |

| | | |
|---|---|---|
| | | மீளாய்வாண்டிற்குரிய 287 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் 37 நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | (i) பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி மத்திய நிதியம் எனும் பெயரிலான நிதியமொன்று (Central Fund) தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த நிதியத்தின் மீதி ரூபா 28,087,451 ஆகும்.<br><br>(ii) திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகார சபையினுள் மோட்டார் சைக்கிள் சுழற்சி நிதியம், பகுதி நேர பாடநெறிகளுக்கான மூலதன ஒதுக்கம் மற்றும் பகுதி நேர பாடநெறிகளுக்கான கடப்பாட்டு நிதியம் எனும் 3 நிதியங்கள் தாபிக்கப்பட்டிருந்தன. மத்திய நிதியத்திற்கு மேலதிகமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த நிதியங்களில் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,466,123ஆகும். |
| (உ) | 2013 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபைக்குச் சொந்தமான 02 மோட்டார் வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 30/94 இன் 2 ஆம் பந்தியும் 4.4.1 ஆம் பந்தியும் | சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் வவுனியா, மன்னார் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட தொழிற்பயிற்சி தேவைகளுக்காக தேசிய பயிலுனர்கள் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,548,292 தொகையான மானியங்களுக்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் வரிசை அமைச்சின் ஊடாக அல்லாது நேரடியாக மானியத் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1991 மே 02 ஆந் திகதி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட 99 வருட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், அதிகாரசபையின் தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டும் காணியின் குத்தகை உடன்படிக்கையின் 9(ஈ)2 ஆம் பந்திக்கு முரணாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முன் அங்கீகாரமின்றி குத்தகை அடிப்படையில் 02 தொலைத்தொடர்பு கோபுரங்களை நிறுவுவதற்கு 02 தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு இடவசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 143,056,895 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 21,878,483 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 164,935,378 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக திறைசேரி மானியம் ரூபா 136,645,000 இனால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 302,380,550 இனால் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமான காரணங்களாக அமைந்திருந்தன.
மீளாய்வாண்டில் மற்றும் கடந்த 4 வருடங்களில் நிதி விளைவுகளைப் மீளாய்வு செய்யும் போது 2016 ஆம் ஆண்டின் போது நிதி விளைவுகளில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்த போதிலும் ஏனைய ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியங்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு ஆகியன சீராக்கப்பட்ட பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 411,171,829 தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு மீளாய்வாண்டளவில் ரூபா 688,391,764 தொகை வரை தொடர்ச்சியான அதிகரித்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் சம்பவங்கள்

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஐந்து உத்தியோகத்தர்களால் அதிகாரசபைக்கு எதிராக தொழில் நியாய சபையில் தொடுக்கப்பட்ட 05 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருவதுடன், அதிகாரசபைக்குச் சொந்தமான வெள்ளவத்த பயிற்சி நிலையத்திற்கு அத்துமீறி நுழைதமை மற்றும் சேதம் விளைவித்தமை தொடர்பில் வெள்ளவத்த பொலிஸால் வெளித்தரப்பினருக்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தலொன்றும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 - 2018 ஆம் ஆண்டுகள் மேவுகை செய்யப்படும் வகையில் அதிகார சபையினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 இன் பிரகாரம் வருடாந்தம் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டில் இடம்பெற்ற மாற்றங்களைக் கருத்திற் கொண்டு பெறுகை திட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய அடிப்படை தேவைப்பாட்டை இனங்கண்டு பெறுகை திட்டம் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் பெறுகை இடம்பெறும் போது போதியளவு மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கு நிர்வாக சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 4.1.2 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(i) தொழில்நுட்பமில்லாத 200 பரீட்சகர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் ரூபா 3.78 மில்லியன் செலவிடப்பட்டு 72 உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தன.

(ii) 30 பரீட்சகர்களுக்காக காற்றுச் சீராக்கி பயிற்சிகளை வழங்குவதற்கும் 20 அழகுகலை பயிற்சி மற்றும் வசதிகள் வழங்குபவர், (Facilitator Training) வீதம் பயிற்சி அளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களுக்குரிய பயிற்சி பாடநெறிகள் ஆண்டினுள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்தின் மூலம் 06 நிலையங்களை நவீனமயப்படுத்துதற்கும் மற்றும் பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 48.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டில் ரூபா 20.23 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்குறித்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்தின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த கல்கமுவ மற்றும் ஹவ்லொக் டவுன் நிலையங்களின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் உயர் முகாமைத்துவத்தின் ஆலோசணையின் பேரில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் நிறுத்துவதற்காக நியாயமான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ) பாடநெறிக்காக அனுமதித்தலும் பாடநெறிகளை விட்டுச் செல்லலும்**

(i) 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிலையத்திற்கான பகுதிநேர பாடநெறிகள் மற்றும் மொழி நிபுணத்துவம் மற்றும் அச்சீட்டு திறன்கள் அதிகரித்தல் இலக்கிடப்பட்ட எண்ணிக்கையில் முறையே 58 சதவீதம் மற்றும் 16 சதவீதமாக இருந்தன. 2017 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த விசேட செயற்திட்டங்களுக்காக 7,486 பயிலுனர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த அனுமதியின் 15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. தலைவரின் பதிலின் பிரகாரம் மதியுரையாளர்களின் படிகள் போதியளவு இல்லாமையால் மதியுரையாளர்கள் ஆட்சேர்ப்பின் போது காணப்பட்ட வசதியீனங்கள் இலக்கை அடைந்து கொள்வதில் தடையாக அமைந்தது.

(ii) நிலையத்தை அடிப்படையாகக் கொண்ட, கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட மற்றும் தேசிய நிறுவனங்களின் பயிற்சி பாடநெறிகளில் ஆண்டின் பாடநெறிகளை விட்டுச் செல்லல் முறையே 14, 28 மற்றும் 18 சதவீதமாக இருந்தமை அதில் கைத்தொழில்களை அடிப்படையான பயிற்சி நடவடிக்கைகளில் பாடநெறிகளை விட்டுச்செல்லல் மிகவும் உயர் மட்டத்தில் காணப்பட்டதுடன், அவ்வாறு விட்டுச் செல்வதை குறைப்பதற்காக அதிகாரசபையினால் தேவையின் பிரகாரம் மதியுரையாளர்களின் சேவை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 ஆம் ஆண்டில் தேசிய நிறுவனங்கள் தவிர மாவட்ட மட்டத்தில் பயிற்சிகளை விட்டுச்செல்வதை கருத்திற்கொள்ளும் போது கூடுதலான விட்டுச்செல்லல் 24 சதவீதம் களுத்துறை மாவட்டத்திலிருந்து அவதானிக்கப்பட்டதுடன் 25 மொத்த மாவட்டங்களை கருத்திற்கொள்ளும் போது 17 மாவட்டங்களில் பாடநெறிகளை விட்டுச் செல்லல் 10 சதவீதத்தை விட கூடுதலாக இருந்தது.

(iv) பொறியியலாளர் பயிற்சி நிறுவகத்தில் கூடுதலான பாடநெறிகளை விட்டுச் செல்லல் அளவு இலத்திரனியல் நுட்பவியலாளர் மற்றும் நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர் பாடநெறிகளில் இடம்பெற்றிருந்தது. தலைவரின் பதிலின் பிரகாரம் பயிலுனர்களின் பொருளாதார பிரச்சினைகள் மற்றும் உயர்கல்வியை நாடிச்செல்லல் இவ்வாறு விட்டுச் செல்வதற்கு காரணங்களாக இருந்தன.

(v) நிலையத்தை அடிப்படையில் பயிலுனர் பயிற்சிக்காக தேசிய நிறுவனங்கள் தவிர மீளாய்வாண்டிற்காக காணப்பட்ட கேள்வி 8,066 விண்ணப்பங்களாக இருந்த போதிலும், கேள்விகளை பூர்த்தி செய்வதற்காக அதிகாரசபையின் இயலளவு 5,537 அதாவது 69 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் உள்ளவாறான அனுமதி 5,416 ஆக இருந்தன. அதன் பிரகாரம் பாடநெறிகளிற்காக காணப்படும் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு கூட இயலளவு அதிகாரசபையிடம் காணப்படவில்லை. எவ்வாறாயினும் கண்டி மாவட்டத்தில் நிலைய அடிப்படை பயிற்சி இயலளவு 340 பயிலுனர்களுக்காக இருந்த போதிலும், ஆண்டின் போது அனுமதி 69 சதவீதமான அதாவது 233 ஆக இருந்தன.

(vi) 04 தேசிய நிறுவனங்களில் பாடநெறிகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட கேள்வி 5776 ஆக இருந்த போதிலும், அதிகாரசபையிடம் காணப்பட்ட வழங்கல் இயலளவு 1631 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அது 28 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் தேசிய நிறுவனங்கள் மூலம் பொருளாதாரத்திற்கு வழங்கக்கூடிய பங்களிப்பினை அதிகரித்துக் கொள்வதற்காக இயலளவினை மேம்படுத்துவது அவசியமென அவதானிக்கப்பட்டது.

(vii) 2017 ஆம் ஆண்டில் நிலைய அடிப்படையிலான பயிற்சி கீழ் 45 பரிசோதனைகளை நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான அனுமதி 49 சதவீதமாக இருந்தது.

**(இ) பாடநெறிகள் நடாத்தப்படாமை**

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கைத்தொழிலை அடிப்படையான பயிலுனர்களை பயிற்றுவிப்பதின் கீழ் 46 பாடநெறிகளுக்காக பயிலுனர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பரிசோதனைகளை நடாத்துதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்**

2017 ஆம் ஆண்டில் பயிலுனர்களுக்காக நடாத்தப்பட்டிருந்த பரிசோதனைகளின் எண்ணிக்கை 36,116 ஆக இருந்ததுடன் இறுதி தொழில் துறை பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை 28,358 ஆக இருந்ததுடன், அதன் பிரகாரம் இறுதித் தொழில் பரீட்சை நடாத்துவதில் தாமதம் காரணமாக இறுதி தொழில் பரிசோதனைக்காக தோற்றியிராத மற்றும் சித்தியடையாத எண்ணிக்கை 21 சதவீதமாக இருந்தது. 2017 ஆம் ஆண்டில் 22,059 சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

**(உ) பாடத்திட்டங்களை விநியோகித்தல்**

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்காக பாடநெறி பாடத்திட்டங்கள் பகிர்ந்தளித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. தொழில்நுட்ப அறிவுடன் கூடிய தமிழ் மொழி மூல மொழிப்பெயர்பாளர்கள் பற்றாக்குறையினால் பாடநெறி விடயங்களை மொழிபெயர்ப்பதற்கு தாமதம் ஏற்பட்டமை இதற்கான காரணமாக இருந்ததாக தலைவரால் பதில் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு 2009 நவம்பர் 01 அந் திகதி முதல் பணிப்பொறுப்பு அடிப்படையில் கடல்சார் பொறியியல் பாடத்திற்காக விரிவுரையாளர் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஒருவரின் சேவை 2017 மார்ச் 23 ஆந் திகதி திடீரென இடைநிறுத்தப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தரால் இத்தீர்மானத்திற்கு எதிராக நீர்கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடொன்றின் பிரகாரம் உரிய சட்டங்கள் மற்றும் யாப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் உத்தியோகத்தருக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொழில் கொள்வோர் மற்றும் ஊழியரின் பங்களிப்புத் தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மிகை கட்டணம், ஊழியர் பணிக்கொடை என்பன ரூபா 2,256,125 மற்றும் மிகைக் கட்டணம் ரூபா 1,091,177 உட்பட ரூபா 3,347,302 தொகையை ஆண்டின் கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது. முகாமைத்துவத்தினால் ஆட்சேர்ப்பு நிபந்தனை மற்றும் காணப்பட்ட சட்ட விதிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படாமையால் இந்த மிகை கட்டணத்தை செலுத்துவதற்கு நேர்ந்துள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன் அப்பெறுமதியான நட்டமொன்று அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு தொகை கொடுப்பனவின் போது ''மொத்த உழைப்பு'' சுற்றறிக்கைகளுக்கு இணங்க சரியாக அர்த்தப்படுத்தப்படாமை காரணமாக உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அதிகாரசபையின் ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட வாழ்க்கை செலவினப் படிகளின் பேரில் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையின் அண்ணளவான கணிப்பீட்டின் பிரகாரம் நிலுவை பங்களிப்பு தொகை ரூபா 135,129,295 ஆக இருந்ததுடன் 2018 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரை எவ்வித தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமை காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 8 சதவீதமான ஊழியர் பங்களிப்புத் தொகை மற்றும் கொடுப்பனவு தாமதமான காரணத்தினால் விதிப்பதற்கு இடமுள்ள மிகைக் கட்டணம் மேற்குறித்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக கொடுப்பனவு செய்வதற்கு நேரக்கூடிய ஆபத்தொன்று அதிகாரசபைக்கு காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

(இ) அதிகாரசபை மற்றும் தனியார் சேவைகள் வழங்கல் நிறுவனமொன்றுக்கு இடையே சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்காக 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி மாதாந்தம் 892,500 கொடுப்பனவு அடிப்படையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய ஊழியர்கள் முறையாக சேவையில் ஈடுபடுத்தாமல் இருந்ததுடன் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்றப்படாதிருக்கையில் காணப்படும் குறைபாடு தொடர்பாக கவனம் செலுத்தப்படாமலும் 2018 மே 31 ஆந் திகதி வரை 04 சந்தர்ப்பங்களில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

## 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திலும் மாவட்ட நிலையங்களிலும் 547 உபகரணங்கள் மற்றும் இருப்பு உருப்படிகள் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் பௌதீக ரீதியாக காணப்பட்ட 262 பொருள் உருப்படிகள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளக பரிசோதனைக்கு உட்பட்ட வகையில் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் பரிசோதனை மற்றும் அங்கீகரித்தல் கணனி கணக்குகள் முறைமைக்கு கொடுக்கல் வாங்கல்களை உட்படுத்துதல், காசோலைகளில் கையொப்பமிடல், வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் போன்ற நிதிப் பிரிவின் கடமைகள் பகிர்ந்தளிக்கப்படாமல் ஒரே உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 01 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக 08 நிர்மாணம் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டங்களுக்குரிய ரூபா 29,484,608 காணப்பட்ட நடைமுறை வேலைகள் வேலைக் கணக்கில் காணப்பட்டதுடன் அச்செயற்திட்டங்கள் செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு தேவையான சீராக்கங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபையின் ஆண்டறிக்கையின் பிரகாரம், சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் (ILO) இனால், 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த உதவிகளின் பெறுமதி ரூபா 14,548,293 ஆக இருந்ததுடன், கணக்கின் பிரகாரம் அதிலிருந்து செலவிடப்பட்ட செலவினம் ரூபா 10,517,319 ஆக இருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) உதவிகள் கணக்கில் மீதியொன்று இல்லாதிருந்தமையால் ரூபா 4,030,974 ஆன பெறுவனவுகள், செலவிடப்பட்டிருந்தா அல்லது சேமிக்கப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு அணிவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 23,100 பெறுமதியான 154 அதிகாரசபையின் இலட்சினைகள் 2018 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையிலும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தலைமை களஞ்சியத்தில் விளைவற்ற வகையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேவைப்பாட்டினை உரிய வகையில் இனங்காணாமல் 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 12,500 பெறுமதியான 50 உலோக பேனைகள் (வெள்ளி) ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பிரதான களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) 2014 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய பிரதான களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த 08 வகைக்குரிய ரூபா 1,395,744 பெறுமதியான 2,458 பயிற்சி உபகரண உருப்படிகள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பயிற்சி பிரிவின் மூலம் அவ்வாறு விளைவற்றுக் காணப்பட்ட பயிற்சி உபகரணங்களை இனங்கண்டு அவற்றை ஆக்கபூர்வமான ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அச்சிட்டு இயந்திரங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 355,500 தொகையான டோனர் 58 காட்ரிஜ் மற்றும் 11 ரிபன் அச்சீட்டு இயந்திரங்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட காரணத்தினால் விளைவற்றுக் காணப்பட்டன.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ரூபா 176,151 பெறுமதியான 12 டோனர் காட்ரிஜ் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விநியோகிக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.6 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தி மற்றும் 9.4 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணாக அதிகாரசபையின் ஏழு ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கும் இரண்டு பேர் அமைச்சரின் பதவியணிக்கும் 2008 மே 28 ஆந் திகதி முதல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், விடுவிக்கப்பட்ட காலம் 05 மாதங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலப்பகுதியாகும். ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த இந்த உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் இவ்வாறு இணைப்புச் செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மீள்நிரப்பப்பட வேண்டிய போதிலும், ரூபா 2,769,020 ஆன சம்பளங்கள் மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,358 ஆக இருந்ததுடன், ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் 55 பேர் உள்ளடங்கலாக உள்ளபடியான பதவியணி 1,128 ஆக இருந்தது. அதற்கமைய நிரந்தர வெற்றிடங்களின் எண்ணிக்கை 230 ஆக இருந்ததுடன், அந்த பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விரிவுரையாளர், மதியுரையாளர் மற்றும் பரிசோதகர் போன்ற கல்விசார் தொகுதியின் 128 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டதுடன், அது நிறுவனத்தின் பயிற்சி மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்பில் பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபைக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காது 2011 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு பிரிவில் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தார்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக கூட்டிணைப்பாளர் பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு அப்பதவிக்காக 2016 மே 02 ஆந் திகதி நபரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நிதியத்தின் மூலம் அந்த உத்தியோகத்தருக்கு சம்பளம், வாகனம் மற்றும் எரிபொருள் படிகளாக 2016 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 585,569 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

மேலும், திறன்துறை சபைகளுக்குரியதாக நடாத்தப்படுகின்ற கலந்துரையாடல் கூட்டிணைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் இந்த உத்தியோகத்தரின் கடமைகளாக இருந்ததுடன், தெரிவு பரிசோதனையில் கண்டறியப்பட்டதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் 2016 திசெம்பர் மாதத்தின் போது 10 நாட்களும் 2017 சனவரி முதல் ஏப்ரல் வரை 26 நாட்களுமாக 36 நாட்கள் மாத்திரம் சேவை புரிந்து இருந்ததுடன் சம்பளம் மற்றும் படிகளாக 2017 ஏப்ரல் வரை மொத்தம் ரூபா 420,200 தொகையான படிகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் கடமை புரியும் ஒரு நாளைக்கு ரூபா 11,672 அளவு சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய எஸ்பீ/எஸ்ஜீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க அரச கொள்கைகள் மற்றும் அரச பாதுகாப்பு செயலாளரின் கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சிநிரலின்'' பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்காததன் காரணமாக தமது விடயப் பரப்பிற்கு உட்படும் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைல்கல்லையும் இலக்குகளை அளவிடுவதற்காக சுட்டிகளையும் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 81 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 மே 21 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் அதன் இரண்டு அங்கத்தவர்களால் கையொப்பமிட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நிர்வாக சபையின் ஒரு அங்கத்தவரினால் மாத்திரம் கையொப்பமிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நிர்வாக சபையின் உறுப்பினரொருவர் அல்லாத அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமும் நிர்வாக சபை சார்பாக அதில் கையொப்பமிட்டிருந்தார்.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு 08 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க உள்ளக கணக்காய்வொன்ற மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

#### 6.3.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகை நடவடிக்கை தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள பொதுவான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.2 பந்தியின் பிரகாரம் பதுளை பயிற்சி நிலையம் நவீனமயப்படுத்தல் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் மற்றும் பயிற்சி நிலையங்கள் நிர்மாணத்திற்குரிய ஒப்பந்தங்களுக்குரிய மொத்த கிரய மதிப்பீடு நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.3 பந்தியின் பிரகாரம் தேசிய போட்டி கூறுவிலை கோரும் போது ஓப்பந்தங்களிற்கான கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு 03 வாரங்கள் அதாவது 21 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 01 ஒப்பந்தந்திற்குரிய கூறுவிலை சமர்ப்பிப்பதற்காக 18 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(iii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13 பந்தியின் பிரகாரம் ஒப்பந்த மதிப்பீட்டுப் பெறுமதி 10 சதவீதத்தை மிகைத்த ஒப்பந்தங்கள் விலகல் கட்டளைக்காக குறித்த பெறுகை குழுக்களின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 02 ஒப்பந்தங்களுக்குரிய ரூபா 6,257,001 தொகையான மேலதிக வேலைககளுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதுளை மாவட்ட பயிற்சி நிலையத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண செயற்பாடுகள் 2016 செப்தெம்பர் 18 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், நிர்மாணம் 496 நாட்கள் தாமதமாகியிருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கையின் படி 10 சதவீத ஆகக் கூடிய தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018 மே 16 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி அறிக்கை வழங்கி அதிகாரசபைக்கு கட்டிடத்தை கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (i) 2018 ஏப்ரல் 09 ஆந் திகதிய என்ஏஐரீஏ/18/ஜீஏ/11/II (Construction) ஆம் இலக்க குருநாகல் மாவட்ட முகாமையாளரின் (கடமை மேவுகை) கடிதத்தின் பிரகாரம் குருநாகல் மாவட்ட அலுவலக கட்டிடத்தின் சகல நிர்மாணங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகள் 90 சதவீதம் தரமானதாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு மாவட்ட முகாமையாளரால் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் நிர்மாணத்தின் தரத்தை தீர்மானித்தமை கணக்காய்வின் போது சிக்கலொன்றாக இருந்தது.

(ii) 2018 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையில் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்தல் 107 நாட்கள் தாமதமாகியிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.14 பந்தியின் பிரகாரம் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் (Liquidated Demages) என ஒரு நாளைக்கு ஆரம்ப ஒப்பந்த பெறுமதியில் 1/4000 அறவிடப்பட வேண்டிய போதிலும் நிர்மாண தாமதம் காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 158,438 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாமல் இறுதி பட்டியலுக்காக கொடுப்பனவு செய்வதற்கு அதிகாரசபையின் தலைவரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) (i) திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்ட அலவலகத்தில் கலந்துரையாடல் அறையை நவீனமயப்படுத்து வதற்காக ரூபா 2,134,127 தொகையான ஒப்பந்தத்திற்கு கையொப்பமிடப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் கீழ் 2017 செப்தெம்பர் 05 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி உரிய நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்ததாக கொழும்பு மாவட்ட முகாமையாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்து பொறுப்பேற்றதாக பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 பந்தியின் பிரகாரம் வேலை பூர்த்தி சான்றிதழ் ஒன்று பொறியியலாளர் / மதியுரையாளரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கலந்துரையாடல் அறையின் நவீனமயப்படுத்தல் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு 03 மாதங்கள் 06 நாட்கள் தாமதமாகியிருந்த போதிலும் கேள்வி ஆவணத்தில் தாமதமாகும் ஒரு நாளைக்கு ஒப்பந்த பெறுமதயில் 1/4000 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 51,219 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாமல் இறுதியில் பட்டியல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) (i) யாழ்ப்பாண மாவட்ட பயிற்சி நிலைய நிர்மாணத்திற்கான தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 18,847,582 பெறுமதியான கிரய மதிப்பீடு ரூபா 19,735,082 என திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக தலைவரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபையின் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த பணிப்பொறுப்பு உத்தியோகத்தர் ஒருவர் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு பிரிவின் பிரிவுத் தலைவராக செயற்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டினை திருத்தம் செய்தல், ஒப்பந்த கடிதங்களுக்காக கையொப்பமிடல் உட்பட நிர்மாணம் பிரிவின் சகல நடவடிக்கைகளை அந்த உத்தியோகததரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.4(ஈ) பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக வரிசை அமைச்சின் அல்லது பெறுகை நிறுவனத்திற்கு வெளிவாரி விடயம் தொடர்பாக அறிவுடன் கூடிய உத்தியோகத்தரொருவர் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) கட்டிட நிர்மாண திட்டத்திற்காக பிரதேச சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை காரணமாக 2015 மார்ச் 02 ஆந் திகதி யாழ்ப்பாண பிரதேச சபை திட்டமிடல் உத்தியோகத்தரால் தடை உத்தரவொன்று விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அது வரை ஒப்பந்தக்காரருக்கு ரூபா 3,399,069 ஆன முற்பணத் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்த வழங்கல் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களுக்குள் அதாவது 2015 யூன் 22 ஆந் திகதி நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரர் கால நீடிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த காரணங்களுக்கு இடையே சீரற்ற காலநிலை நிலைமை தவிர ஏனைய காரணங்கள் நியாயமான காரணங்களாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. மேலும் ஒப்பந்தக் காலத்தை நீடித்தல் அதிகாரசபையின் தலைவரால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்கு முரணாக மற்றும் அதிகாரஎல்லையை மிகைத்து பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) கால நீடிப்பினை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

நிர்மாண காணியின் மண், நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு பொருத்தமான மட்டத்தில் இல்லாதிருந்தமையால் 4½ அங்குலம் வரை மண்ணை அகற்றுவதற்கு நேர்ந்ததாக ஒப்பந்த நிறுவனம் தெரிவித்திருந்ததுடன் திட்டமிடல் சந்தர்ப்பத்தில் நிலப் பரிசோதனை மேற்கொள்ள அதிகாரசபை நடவடிக்கை எடுக்காமை இந்த சர்ச்சைக்குரிய நிலைமை தோன்றுவதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) நிர்மாண நடவடிக்கைகளின் போது சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அதிகாரசபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் கவனம் செலுத்தப்படாமையால் யாழ்ப்பாண மாவட்ட பொதுச் சுகாதார பரிசோதகரால் நிர்மாண வளவில் காணப்படும் அசுத்தமான நிலைமை காரணமாக டெங்கு ஆபத்துடன் கூடிய வலயமொன்றாக சிவப்பு அறிவித்தலொன்று வழங்கப்பட்டு ரூபா 25,000 ஆன தண்டப் பணமொன்று அதிகாரசபைக்கு விதிக்கப்பட்டிருந்தது.

(vi) 2017 சனவரி 30 ஆந் திகதிய அதிகாரசபையின் தலைவரின் கடிதத்தின் மூலம் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடத்தில் காணப்படும் தவறுகள் திருத்தம் செய்யப்படவில்லை எனவும் கட்டிடத்தை பொறுப்பேற்பதற்கு முன்னர் அத்தவறுகளை சரி செய்யுமாறு ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் சீர் செய்யப்பட்டு கட்டிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 நவம்பர் 23 ஆந் திகதிய திருத்திய பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட மீண்டெழும் செலவினங்களுக்கு இடையே 10 சதவீதம் முதல் 211 சதவீதம் வரையிலும் மூலதன செலவினங்கள் 15 சதவீதம் முதல் 460 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டின் மூலம் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,000,000 மற்றும் ரூபா 08 மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 5,580,000 ஆன முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

## 6.5 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சிலிருந்து 2014 ஆண்டின் போது உலக இளைஞர் மாநாட்டிற்காக அதிகாரசபையினால் செலவிடப்பட்ட ரூபா 2,000,000 தொகை பெறவேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது கட்டுபெத்த பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விடுதியில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கியின் செப்புக் கம்பியின் சுமார் 25 அடிகள் வரையான அளவு காணாமற் போனமை தொடர்பில் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறியியல் பாடநெறிகளின் விடயப்பரப்பிற்கு தேவையான கால ரீதியான திருத்தங்களை மேற்கொள்வதற்காக அதிகாரசபையினால் தனியார் கம்பனியொன்றுடன் 2014 மே மாதத்தின் போது ரூபா 3,231,500 பெறுமதியான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட பணி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், அதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,809,640 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதியளவில் 04 வருட காலம் கடந்திருந்த போதிலும், குறித்த பணி மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டிருந்தது. முற்பணங்களை செலுத்துவற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 723,856 தொகையான வங்கிப் பிணை 2014 யூலை 31 ஆந் திகதி நிறைவடைந்திருந்ததுடன், செலுத்தப்பட்ட முற்பணத் தொகைகளையும் அறவிடுவதற்கு முடியாதிருந்தமையால் அப்பெறுமதியான நட்டமொன்று அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்தது. 2018 செப்தம்பர் 18 ஆந் திகதி உரிய கம்பனியின் உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டு இது தொடர்பாக கலந்துரையாடி தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தலைவரின் பதிலின் பிரகாரம் எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தத.

(ஈ) இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் அரசுடமையாக்கப்பட்ட ஓட்டத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாத டொயோட்டா கொரோனா வகையான வாகனம் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,134,000 பெறுமதிக்கு அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அந்த வாகனம் அதிகாரசபையினால் பதிவு செய்யப்பட்டாமலும், ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமலும் இருந்ததுடன் 2016 நவம்பர் 29 ஆந் திகதி அதன் என்ஜின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி ஜேர்மன் பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த வண்டியின் ஓட்ட நிலைமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்ற வகையில் ஒருகொடவத்த மோட்டார் வாகன பொறியியலாளர் பயிற்சி நிறுவகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மற்றும் உரிய பரிசோதனையொன்றை மேற்கொள்ளாது கொள்வனவை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு மற்றும் கொள்வனின் பின்னர் பழுதுபார்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் அப் பதவிக்குரிய அடிப்படை சம்பளம் ரூபா 38,530 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2009 நவம்பர் 10 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைக் கடிதத்திற்கு முரணாக அப்பதவிக்குஇணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தரின் ஆரம்ப சம்பள படிமுறையாக ரூபா 25,640 தொகை நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிட்ட சம்பளத்தை செலுத்துமாறு நிறுவனத்திடம் கோரியிருந்த போதிலும் சம்பளத்தை திருத்தம் செய்யாததன் பேரில் அந்த கோரிக்கை தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது இரு தரப்பினர் உடன்பட்ட சம்பள அளவு மற்றும் நிலுவைச் சம்பளம், பதவியை பொறுப்பேற்ற திகதி முதல் திருத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பெறுபேறாக உரிய உத்தியோகத்தருக்கு ரூபா 436,805 கூட்டுத்தொகையான நிலுவைச் சம்பளங்களை செலுத்த நேர்ந்திருந்தது. இந்நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபையின் உப தலைவரால் 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதி நடுத்தர முகாமையாளர் மட்டத்திற்குரிய உத்தியோகத்தரின் சேவையை நிரந்தரமாக்குவதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு தனிப்பட்ட கோவை தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த செயலாற்றல் அறிக்கை அந்த உத்தியோகத்தரால் தெரிந்துகொண்டே அகற்றப்பட்டு வேறொரு செயலாற்றல் அறிக்கையொன்று இணைக்கப்பட்டிருந்ததாக உதவிப் பணிப்பாளர் (மனித வளம்) 2015 செப்தெம்பர் 23 ஆந் திகதிய குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அதிகாரசபைக்குரிய வாகனமொன்று 2007 முதல் 2014 ஆம் ஆண்டு வரை என்ஜின் திருத்த வேலைக்காக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட ஒருகொடவத்த வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது அத்திருத்த வேலைக்காக ரூபா 918,428 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதி 2014 ஆம் ஆண்டளவில் அது ரூபா 1,683,500 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டின் போது இந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன், 2016 மார்ச் 15 ஆந் திகதி தீப்பற்றியிருந்ததுடன், எனினும் 2017 நவம்பர் 21 ஆந் திகதி வரை மீண்டும் திருத்தம் செய்யப்படாமல் தனியார் கராஜ் ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததடுன் காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 110,040 தொகைக்கு மாத்திரம் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் வண்டியை ஓட்ட நிலைமைக்கு உட்படுத்த மடியாதிருந்ததாக தலைவரால் பதில் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) களஞ்சியக் கட்டுப்பாடு | கொள்வனவு செய்யப்பட்ட சில இருப்பு விடயங்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்படாமை. |
| (ஆ) பதவியணியினர் நிருவாகம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு புறம்பாக பதவியணியினர் ஆட்சேர்க்கப்படுகின்றமை. |
| (இ) நிதிய முகாமைத்துவம் | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் ஒதுக்க நிதியினை பயன்படுத்தி செல்ல இடமளிக்கப்படாமையால் பணம் விளைவற்றுக் காணப்பட்டது. |
| (ஈ) கணக்கீடு | (i) நாட்குறிப்பு பதிவுகளை இடும் போது திட்டவட்டமான எல்லைகளை ஒப்படைத்து உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிராமை.<br>(ii) அதிகாரசபையின் உறுதிச்சீட்டுக்கள் முறையற்ற விதத்திலும் பூரணமின்றியும் கோவைப்படுத்தப்பட்டமை மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரினால் பரிசீலிக்கப்படாது கணக்காய்விற்கு முன்வைக்கப்படுகின்றமை. |

(iii) நாட்குறிப்பு பதிவுகளை இடுதல், கணக்கு மீதிகளை மாற்றுதல் கணனி முறைமை மூலம் நிர்வகிக்கப்படாமை, முறையான கட்டுப்பாடொன்றில்லாமல் நாட்குறிப்பு பதிவுகள் கணனி முறைமைக்கு உட்படுத்துதல்.

(iv) வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கைகளால் தயாரிக்கப்பட்டதுடன் (Manual) கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டு வேறுபாடுகளுக்காக காரணங்கள் இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்படாமை.

(v) எளிமையான வகையில் விளங்கக்கூடிய வகையில் பாதுகாப்பான வகையில் முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்படாமை.

| | |
|---|---|
| (உ) ஒப்பந்த நிர்வாகம் | நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பான கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை |